# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group II தேர்வு

பாடம் : பொதுத்தமிழ் (இலக்கணம்)

பகுதி : **எவ்வகை வாக்கியம் என கண்டறிதல்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 2 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# எவ்வகை வாக்கியம் எனக் கண்டறிதல்

**எவ்வகை வாக்கியங்கள் என கண்டறிக**

**வாக்கிய வகை:**

சொற்கள் தொடர்ந்து நின்று பொருள் தருவது சொற்றொடர் (அ) வாக்கியம் எனப்படும்.

1. **செய்தி வாக்கியம்:**

ஒரு செய்தியை உணர்த்தும் வாக்கியம் செய்தி வாக்கியம் எனப்படும்.

எ.கா : கவிமுரசு பரிசு பெற்றாள், ஆடலரசு சிறப்பாகச் சொற்பொழிவாற்றினான்.

2. **வினா வாக்கியம்:**

ஒரு சொற்றொடர் வினாப் பொருளை உணர்த்துகின்ற வகையில் அமைவது வினா வாக்கியம் எனப்படும்.

எ.கா. : விளையாட்டுப் போட்டியில் வென்றவர் யார்?

பாரதியார் எங்கு ஆசிரியராகப் பணியாற்றினார்?

3. **உணர்ச்சி வாக்கியம்:**

உவகை, அவலம், அச்சம், இரக்கம், இழிவு, வெகுளி, வியப்பு போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்துவது உணர்ச்சி வாக்கியம் எனப்படும்.

எ.கா.: குற்றால அருவியின் அழகுதான், என்னே!

ஐயகோ! இளவழகனாரின் மறைவு ஈடு செய்யவியலுமோ!

4. **ஏவல் வாக்கியம் :**

பிறரை ஏவுதல் அல்லது பிறருக்குக் கட்டளையிடும் முறையில் வாக்கியம் அமைவது ஏவல் வாக்கியம் எனப்படும்.

எ.கா.: திருக்குறளைப் படி.

மூத்தோர் சொல் கேள்.

5. **உடன்பாட்டு வாக்கியம்:**

❖ தொழில் நிகழ்வதை உணர்த்தி வரும் வாக்கியம் உடன்பாட்டு வாக்கியம் எனப்படும்.

எ.கா.: தமிழரசி புதுவைக்குச் சென்றாள்

இனியன் உணவு உண்டான்.

6. **<u>எதிர்மறை வாக்கியம்:</u>**

தொழில் நிகழாமையை உணர்த்துகின்ற வாக்கியம் எதிர்மறை வாக்கியம் எனப்படும்.

எ.கா.: தமிழரசி புதுவைக்குச் சென்றிலள்.

இனியன் உணவு உண்டிலன்.